# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஏ.பெரியசாமி**
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**கோ.பழனியம்மாள்**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

மாநிலச் செயலாளர்கள்
**சி.ஆர்.இராஜகுமார்**
**இரா.ந.நம்பிராஜன்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**உ.சண்முகம்**
**தெ.வாசுகி**


ஊடக செய்தி : 6/2021 நாள் : 25.02.2021

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.அன்பரசு மற்றும் பொதுச் செயலாளர் ஆ.செல்வம் ஆகியோர் இணைந்து வெளியிடும்.

**ஊடகச் செய்தி**

## போராடும் சாலைப் பணியாளர்களின் மாநில நிர்வாகிகளை அழைத்துப்பேசி அனைத்து கோரிக்கைகளை நிறைவேற்றுக !

தமிழக அரசின் நெடுஞ்சாலைத்துறையில் சாலை பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் சுமார் 10,000 சாலைப் பணியாளர்களின் கோரிக்கைகளான

41 மாத பணி நீக்கக் காலத்தை பணிக்காலமாக அறிவித்து பணப்பலன்கள் வழங்கிட வேண்டும்.

சாலைப்பணியாளர்களுக்கு தொழில்நுட்ப கல்வித்திறன் பெறா ஊழியருக்கான (Unskilled Employees) ஊதிய நிர்ணயம் ரூ.5,200/- ரூ.20,200 தர ஊதியம் ரூ1,900/- உடனே வழங்க வேண்டும்.

சாலைப்பணியாளர்களுக்கு 10% ஆபத்துப்படி (Risk Allowance)நிரந்தர பயணப்படி (Fixed Travelling Allowance) வழங்கிட வேண்டும்.

சாலைப் பணியாளர்கள் பணி நீக்க காலம் மற்றும் பணி காலத்தில் இறந்தவர்களின் வாரிசுகளுக்கு 18 ஆண்டுகளாக பணி வழங்காமல் இருக்கும் அவலத்தை போக்கிட உடனே பணி வழங்கிட வேண்டும்.

சாலை பராமரிப்பு பணியை தனியார்மயமாவதை கைவிட வேண்டும் உள்ளிட்ட நீண்டகால நிலுவை கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601



சாலைப் பணியாளர் சங்கத்தின் சார்பில் நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் அலுவலகம் முன்பு 25.02.2021 வியாழன் முதல் சாலைப்பணியாளர்கள், குடும்ப பெண்கள் மற்றும் குழந்தைகள் கருப்பு உடை அணிந்து தொடர் காத்திருப்பு சங்கொலி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சாலைப் பணியாளர்களை காவல் துறையினர் கைது செய்துள்ளதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் வன்மையாக கண்டிக்கிறோம்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சாலைப் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வரவேண்டும், அவர்கள் மீது அடக்குமுறைகளையும், அச்சுறுத்தல்களையும் கைவிடவேண்டும், கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுவிக்கவும், சங்க நிர்வாகிகளை அழைத்துப்பேசி நியாயமான வாழ்வாதார கோரிக்கைகளுக்கு சுமூக தீர்வு காண தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

(மு.அன்பரசு)
மாநிலத் தலைவர்

(ஆ. செல்வம்)
பொதுச்செயலாளர்